பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 5 (17—2—68) சனி ★ வெளியூர்: மாசி 6 (18—2—68) ஞாயிறு [இதழ்: 205

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

சட்டமன்ற இரு அவைகளிலும் தொடர்ந்து நேற்றையத் தினமும் மொழிப் பிரச்சினை, மையப் புள்ளியாகத் திகழ்ந்திருக்கிறது!

மேலவையில் நான்காம் நாளாகவும், பேரவையில் ஐந்தாவது தினமாகவும் கவர்னர் உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மான விவாதங்களில் மொழி விவகாரங்கள் குறித்து இரண்டு இடங்களிலுமாகப் பேசியிருப்பவர்களில் ம. பொ. சிவஞானமும், டாக்டர் இலட்சுமணசாமியும் கவனத்தைக் கவருகின்றனர்!

பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, தமது உரையின் நடுவே கோவைச் சம்பவம் பற்றி மாணவர்கள் ஆயிரக் கணக்கில் தம்மைவந்து அடக்க உணர்ச்சியுடனும், மரியாதைப் பண்புடனும் பார்த்தது பற்றியும் அவர்கள் சார்பாக வன்முறைச் சம்பவம் பற்றி அவர் மன்னிப்புக் கேட்டதும் நெஞ்சுருக்கும் சொற்களாகும்.

அரசியல் கலக்காத மாணவர் உலகம் பற்றிய அவரது கருத்துக்களுக்குப் பின்னராவது, அரசியல், கல்வி ஆகிய இரு துறைகளிலும்—மொழி விவகாரத்தில்—இனி அமைதி நிலவுமென எதிர்பார்ப்போமாக!

ம. பொ. சி., டாக்டர் ஏ. இலட்சுமணசாமி ஆகிய இருவரும் தமிழக அரசின் பிப். 23-ந் தேதிய இருமொழித் தீர்மானம் பற்றி மனமாரப் பாராட்டியிருப்பது மன மகிழ்வைத் தருவதாக இருக்கிறது.

'ஆங்கிலத்தோடு தொடர்பு கொண்டவர்' எனக் கருதப்படும் டாக்டரும், 'தமிழிடம் அக்கறை கொண்டவர்' என்று சொல்லப்படும் ம. பொ. சி.-யும் கழக அமைச்சரவையின் ஆங்கிலம்—தமிழ் பற்றிய மொழிக் கொள்கையைப் பாராட்டிவிட்ட பின்னர், 'தமிழகத்தின் மொழிக் கொள்கைக்கு மாற்று உரை கல் தேவையில்லை' என்றே கூறலாம்!

"ஆங்கிலத்தின் தரம் குறையக் கூடாது என்பதில் நானும் அக்கறை கொண்டவன்—உரிமை உள்ளவன்"

என்று ம. பொ. சி.-யும்

"நான் இருக்கும்வரையில், 'பல்கலைக் கழகத்தில் தமிழ் பாடமொழியாக ஆக முடியாது' என்று சிலர் கருதுகிறார்கள்; உண்மையில், தாய்மொழியில் பாடம் கற்பிக்கப்படுவதற்கு நான் எதிரி யல்ல"

என்று டாக்டரும்,

எடுத்துச் சொல்லியிருக்கும் வார்த்தைகள், இதயத்திலிருந்து பிறந்தவைகளாகும்!

"இந்திய ஒற்றுமைக்கு இந்தி மொழியின் துணையை நாடாதீர்"

என்று இலட்சுமணசாமி அவர்களும்,

"ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ள தி. மு. கழகத்தைப் பயன்படுத்தி மொழிப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துங்கள்"

என்று ம. பொ. சி. அவர்களும்,

தந்துள்ள அறிவுரைகள், டில்லியின் காதுகளுக்கு எட்டுவதற்காகவே பயன்பட வேண்டும் என்ற அக்கறையில் பிறந்தவையாகும்!

தமிழ் பாடமொழியாவதில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முழு ஒத்துழைப்பினையும் தரத்தயாராகயிருப்பதாக டாக்டர் கொடுத்துள்ள உறுதிமொழி தமிழ் பாடமொழியாவதில் மேலவையில் நேற்றையத் தினமே சிலர் எழுப்பியுள்ள சந்தேகங்களைப் போக்குவதற்கும் பெருமளவுக்குப் பயன்படுமென்பதில் ஐயமில்லை!

பொது வாழ்க்கை — தொழில்துறை — அரசியல் அனுபவம் பெற்ற டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், 'என்னுடைய இருபது ஆண்டுக் கால சட்டமன்ற வரலாற்றில், கவர்னர் உரை, இதுபோன்ற கவனிப்பைப் பெறவில்லை' என்று குறிப்பிட்டிருப்பது, கவர்னர் உரை பற்றி 'நம் நாடு' ஏற்கனவே வெளியிட்டிருக்கும் கண்ணோட்டத்துக்கு உறுதி சேர்க்கிறது!

ம பொ. சி. அவர்களும் கவர்னர் உரையை வேறொரு முறையில் அணுகி, அரசியல் வாதப் பிரதிவாதங்களுக்குத் தககதொரு விளக்கமளித்திருக்கிறார்.

குடியரசுத் தலைவரின் பிரதிநிதியான கவர்னர், தமிழக அரசின் மொழிக் கொள்கையினைப் பாராட்டி—ஆதரித்து உரையாற்றியிருப்பதொன்றே, இங்கு, 'தேச விரோதமானது' அல்லது 'அரசியல் மோசடி' என்ற எதுவும் நடந்துவிடவில்லை என்பதற்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதாக இருப்பதனை ம. பொ. சி. அவர்கள் படம்பிடித்துக் காட்டியிருப்பது, அவரது அரசியல் உள்ளுணர்வின் ஆழத்தை மட்டுமல்ல—'எதிர்காலத்தில் தோன்றலாம்' எனக் கருதப்படும் சில பிரச்சினைகளுக்கு இப்போதே தக்க பதிலளிப்பதாகவும் இருக்கிறது!

"மொழிப் பிரச்சினை முன்னே வந்து நிற்பதால், மக்களின வாழ்க்கைப் பிரச்சினை பின்னே தள்ளப்படுகிறது"

என்று, தமது உரையின் ஓரிடத்தில் ம. பொ. சி. குறிப்பிட்டிருப்பதனை, அவரே சற்று விளக்கிப் பேசியிருந்தால், இன்னும் பன்மடங்கு நன்மை செய்தவராக இருந்திருப்பார்!

அரசியலுடன் கலந்த மொழிப் பிரச்சினை, எப்படி எப்படியோ பெரிதாக—ஆளுபவர்களின் கவனத்தையும் நேரத்தையும் ஆக்கிரமித்துவிடுவதால், வளரும் நிலையிலுள்ள நாடான இந்தியாவின் மக்கள் வாழ்க்கைத் தேவைகளை நினைப்பதற்கும் அவர்களுக்கு நேரமில்லை! 'சமுதாய நன்மை' என்ற இலக்கு எங்கோ மறைந்து கிடக்கிறது! காலமறிந்து ம. பொ. சி. அவர்கள், இதனை நினைவுபடுத்தியிருக்கிறார்!

'கழக உறுப்பினர்கள்' என்றால், 'பிரிவினைவாதிகள்' என்ற குற்றச்சாட்டைச் சுமத்த முன்வரலாம்; ஆனால், ம. பொ. சி.-யும், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களும், **'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை; இதற்கான வழிவகை காண மறு சிந்தனை அவசியம்'** எனப் பேசியிருப்பது, கவர்னர் உரையில் இடம்பெற்றுள்ள கருத்துக்களுக்கு ஒப்புதல் முத்திரை பெற்றுத் தருவதாக இருக்கிறது!

★

மேலவையில் நேற்றையத்தினம் உரையாற்றியிருக்கும் க. அறிவழகன், தமிழகத்தின் இருபது ஆண்டுக்கால இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தினை நினைவுபடுத்தும் வகையில், பிப்ரவரி 23-ந் தேதியதீர்மானத்தை, 'அவசரத் தயாரிப்பு' என்று விமர்சிப்பவர்களுக்குத் தகுந்த விளக்கமளித்துள்ளார்!

★

காங்கிரசல்லாத அரசுகளைக் கவிழ்ப்பதற்கு ஐதராபாத் மாநாட்டில் காங்கிரசு மேலிடம் பச்சை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

மொழிச் சிக்கல் தீரப் புது முயற்சியாம்

இந்தி பேசாதோர் சுமையைக் குறைப்பது பற்றிப் பேசப்பட்டு விட்டதாம்!

மக்களவையில் உள்துறை அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, பிப். 16—

"மொழி பற்றிய தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் கூடுதல் சுமைப் பிரச்சினையை மத்திய அரசு பரிசிலனை செய்து வருகிறது"

என்று, உள்துறை அமைச்சர் சவாண், மக்களவையில் தெரிவித்தார்.

"ஆட்சி மொழிச் சட்டத்தின் விளைவாகக் கடும் பிரச்சினை தோன்றியிருப்பதாலும், இணைப்பு மொழி குறித்துப் பரவலாகக் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளதாலும், மொழிப் பிரச்சினைக்கு இசைவான தீர்வு ஒன்றைக் காண்பதற்குப் புதிய முயற்சி எடுப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?" என்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:—

"முன்னேற்ட விவாதங்கள் நடைபெற்றுள்ளன; கூடுதல் சுமை பற்றிப் பெரும்பாலும் விவாதிக்கப்பட்டது; பல்வேறு தரப்பினர் தலைமையமைச்சரையும், என்னையும் சந்தித்துக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இது குறித்து அரசு சிந்தித்து வருகிறது."

உயிருடன் இருப்பதாக சான்று வேண்டும்!

ஆந்திர உயர் அதிகாரிக்கு விசித்திரக் கட்டளை!

காங்கிரசுக் கட்சி ஆட்சி நடத்தும் இடங்களில், நிர்வாக இயந்திரம் எந்த அழகில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைக் கூறுமுகத்தான், 'டெக்கான் ஹெரால்டு' நாளேடு ஒரு நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் வரி வசூல் ஆயத்தின் முதல் உறுப்பினரான திரு. வி. கே. ராவ் என்பவர், விடுமுறையிலிருந்து விட்டுத் திரும்பிவந்ததும், தாம் வேலையில் இல்லாதிருந்த நாட்களுக்குச் சம்பளம் கோரி தமது சம்பளப் பட்டியலை அனுப்பியிருந்தாராம்.

"விண்ணப்பதாரர் உயிருடன் தான் இருக்கிறார்" என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றை இணைத்து அனுப்பும்படி, அட்வகேட்-ஜெனரல் அலுவலகம் அவருடைய சம்பளப் பட்டியலைத் திருப்பியனுப்பிவிட்டதாம்!

ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்காத தனியார் பள்ளி

அரசே கொடுக்க ஏற்பாடு

சென்னை, பிப். 16—

பூம்புகாரில் உள்ள சரசுவதி துவக்கப் பள்ளி நிர்வாகிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராறு வழக்குமன்றத்திற்குச் சென்றிருப்பதால், அந்தப் பள்ளியாசிரியர்களுக்கு ஓராண்டுக் காலமாகச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படாமலிருந்துவந்ததாகவும், அது பற்றி அரசுக்கு முறையீடு வந்ததன்பேரில் அந்தப் பள்ளியை அரசு அங்கீகரித்து உத்தரவு போட்டு, தலைமையாசிரியர்மூலம் அரசே சம்பளம் வழங்க ஏற்பாடு செய்திருப்பதாகவும், கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

தொழிலாளர் தகராறைத் தீர்க்க இராணுவம்!

கேரளத்துக்கு அனுப்புவதற்கு டில்லி செய்த ஏற்பாடு!

வலது கம்யூனிஸ்டுத் தலைவர் தகவல்

கோட்டயம், பிப். 16—

"மூணாறு கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டத்தில் சில நாட்களுக்குமுன் ஏற்பட்ட தொழில் குழப்பத்தின் போது, தோட்ட உடைமைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க மாநில அரசு தவறுமானால், அங்கு இராணுவத்தை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்திருந்தது"

என்ற தகவலை, வலது கம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

அங்கு தொழில் தகராறு காரணமாகத்தான் குமுறல் ஏற்பட்டது என்றும், தோட்ட உடைமையாளர்களான பிரிட்டிஷாரை எதிர்த்துத்தான் அது நடைபெற்றதாகவும், கொரில்லாப் போர் போன்று அது உருவெடுத்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

பிரிட்டிஷ் குடிமகன் ஒருவர் தாக்கப்பட்டதாகவும், அவரது கார் எரிக்கப்பட்டதாகவும் வந்த தகவலைத் தொடர்ந்து பிரிட்டிஷ் துணைத் தூதுவர் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்ததற்குப் பிறகுதான், மத்திய அரசின் உள்துறை அமைச்சு, இராணுவத்தை அனுப்புவது குறித்து மாநில அரசுக்குத் தெரியப்படுத்தியதாகவும், இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டே முதலமைச்சர் நம்பூதிரிபாடு தலையிட்டுப் போராட்டத்தைத் திரும்பப்பெறச் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இச்செய்தியை பிரபல மலையாள இதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

"நாடு முழுமைக்குமான ஒரு தொடர்பு மொழி அல்லது ஆட்சிமொழியை நிர்ணயிப்பதற்குப் புதிய அரசியல் அமைப்புச் சபையைக் கூட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது"

என்று, நாடாளுமன்ற மேலவையில் பேசிய காங்கிரசு உறுப்பினர் என். ஆர். எம். சாமி கூறினர்.

மும்மொழித் திட்டத்துக்கு மாநிலங்கள் எதிர்ப்பு

மறு ஆய்வு நடத்த முன்வருகிறது டெல்லி

புதுடில்லி, பிப். 16—

மக்களவையில், தாரகேசுவரி சின்கா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், துணைக் கல்வியமைச்சர் பகவத் ஜா ஆசாத் தெரிவித்ததாவது:—

"மும்மொழித் திட்டத்தில் சில மாறுதல்களை, மாநில அரசுகள் தெரிவித்துள்ளன.

"'படிக்கும் மொழிகளை நான்கு ஆக உயர்த்த வேண்டும்' என்றும், 'இரண்டாகக் குறைக்க வேண்டும்' என்றும் பலதரப்பட்ட யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன."

"இவை பற்றியெல்லாம் மத்திய அரசின் கருத்து என்ன?" எனக் கேட்டபோது, 'இது பரிசீலனையில் இருக்கிறது' எனத் தெரிவித்தார்.

நம்நாடு

ஆசிரியர் : இரா.செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 மாசி 5 (17—2—68) சனி

சுப்பிரமணியம் பொய்க் கூற்று

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள், 'இழந்துவிட்ட செல்வாக்கை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குத் தேடித் தரவேண்டும்' என்ற நோக்கத்தில், தமிழக நகரங்கள் பலவற்றிற்குச் சென்றிருந்தார்; அங்கெல்லாம் அவருக்கு மாணவர்கள் கறுப்புக் கொடி காட்டி உபசரித்து, 'திரும்பிப் போ' என முழக்கமிட்டு 'நல்வரவு' கூறினர்.

அவருக்கு எதிராக நடைபெற்ற கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தபோதிலும், போதிய காரணமில்லாமல் அந்த ஆர்ப்பாட்டங்களை அவர்கள் மேற்கொள்ளவில்லை. மாணவர்கள் மனம் புண்படும்படி சுப்பிரமணியம் அவர்கள் இழித்துப் பேசியதுதான் அதற்குக் காரணம். எனவே, மாணவர்களின் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டியவர் சுப்பிரமணியம் அவர்களே ஆவார்.

சுப்பிரமணியம் அவர்களுக்கு எதிராக மாணவர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்த நேரத்தில் அதைப் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆதரவாளர்களாக உள்ளவர்கள், வன்முறைச் செயல்களைத் திட்டமிட்டுச் செய்திருக்கின்றனர். இதை உறுதிப்படுத்த, அந்த ஆர்ப்பாட்டங்கள் சிலவற்றில் 'படி அரிசித் திட்டத்தை விரிவாக்கு' என எழுப்பப்பட்டிருக்கின்ற முழக்கங்களே போதிய சான்ருகும்.

உண்மை இவ்வாறு இருக்க, சுப்பிரமணியம் அவர்களோ, தாம் போகின்ற இடங்களிலெல்லாம் மாணவர்கள் காட்டிய வெறுப்புணர்ச்சிக்கும், கண்ட வன்முறைச் செயல்களுக்கும் முன்னேற்றக் கழகத்தைப் பொறுப்பாக்கி, தொடர்ந்தாற்போல் தூற்றிவந்திருக்கின்ருர். இவ்வாறு தாம் ஏற்கனவே கழகத்தைத் தூற்றிவந்திருப்பது போதாதென்று சென்னைக்குத் திரும்பியதும் செய்தியாளர்களிடம் 'எனக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் முன்னேற்றக் கழகம்தான் காரணம்; இதுபற்றி என்னிடம் நம்பகமான தகவல் இருக்கிறது' எனக் கூறியிருக்கின்ருர்.

சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுது, 'காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர்' என்ற தகுதி அளவுடன் இருந்திடவில்லை. இருபதாண்டுக்காலம் தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்திருக்கின்ற காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்துவருகின்ருர். எனவே, அப்பதவிக்குரிய பொறுப்புடன் பேசவும், கழகத்தின்மீது தக்க சான்றுகளுடன் குற்றஞ்சாட்டவும் இனியாவது அவர் பழகிக்கொள்ள வேண்டும். இல்லையெனில், அவரைத் தலைவராகக் கொண்டுள்ள காங்கிரசுக் கட்சியில் இப்பொழுது குடிபுகுந்திருக்கின்ற சில காப்பறைகளின் அண்டப்புளுகுப் பேச்சுகளுக்கும்—இவருடைய பேச்சுக்கும் தர வித்தியாசம் இல்லாமலே போய்விடக்கூடும்.

கழகத்தின்மீது ஆதாரமில்லாத குற்றங்களைச் சுமத்திவிட்டு, தம்மிடம் 'நம்பகமான தகவல்' இருக்கிறது எனக் கூறுகின்ற பயிற்சியில் முதல்தரமான தேர்ச்சி பெற்றிருப்பவர் முன்னுள் முதலமைச்சர் ஒருவர் மட்டுந்தான் என நினைத்திருந்தோம். தாமும் அப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருப்பவர்தான் என்பதை, தம் வாயாலேயே சுப்பிரமணியம் அறிவித்துக்கொண்டுள்ளார்.

இத்தொடர்பில், சுப்பிரமணியம் அவர்கள் உண்மையை உணர்ந்து தெளிவு பெற வேண்டும் என்பதற்காக, கழகத்தைக் குறித்த சில உண்மைகளைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிருேம்.

முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி -- வலிவினைப் பெருக்கி -- சிறந்த சனநாயக அரசியல் அமைப்பாகவும் உருவாக்கி -- தோன்றிய இருபதாண்டுக்காலத்துக்குள் மாநில ஆட்சியைக் கைப்பற்றி -- பாராட்டத்தக்க வகையில் ஆட்சியின் முதல்வராகப் பொறுப்பேற்றுப் புகழ் மணம் பரப்பிவருகின்ற அறிஞர் அண்ணு அவர்கள், 'நெஞ்சினுலும் வன்முறையைத் தீண்டாதவர்' என்பதுடன், 'பிறர் உள்ளம் புண்படப் பேச விரும்பாத பேருள்ளம் பெற்றிருக்கின்ற பெருந்தகை' என்பதை, ஏற்கனவே சுப்பிரமணியம் அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்; அப்படித் தெரிந்திருக்கவில்லையானுலும், இனியாவது அவர் தெரிந்துகொள்ள வேணடும். இது வெறும் புகழ்ச்சியன்று — இதயபூர்வமாகக் கூறப்படும் முழு உண்மையாகும்.

'மாற்ருன் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' எனச் சுட்டிக்காட்டி---'தன்னிலும் மாறுபட்டவர் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும்' என்பதை வலியுறுத்தி---மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களிடை நட்புறவுக்கு ஊக்கமளித்து ஆக்கம் தேடி வருபவர் அண்ணு அவர்களாவார் என்ற உண்மையையும் சுப்பிரமணியம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

வன்முறைச் செயல்களில் தவறுதலாக உணர்ச்சிக்கு இரையாகி கழகத்தவர்கள் ஈடுபடும்பட்சத்தில், அவைகளை மூடிமறைக்க நினைக்காமல், கழகத்தவர்களைத் தனித்த முறையிலும், பிறர் அறிய வெளிப்படையாகவும் கண்டிக்கின்ற பெருங்குணம் பெற்றிருப்பவர்தான் கழகத்தின் பெருங்காவலர்.

இதற்குச் சான்ருக ஒன்றை மட்டும் குறிப்பிடுகிருேம். சில ஆண்டுகளுக்குமுன் திருச்சியில், இப்பொழுது காங்கிரசுக் கட்சிக்குள் புகுந்து கொண்டு கழகத்தவர்களை வாயில் வந்தபடி ஏசி அரசியல் வாழ்வைச் சீரழித்து வருகின்ற ஒருவர்மீது வீசிடத்தகாத பொருளை வீசியதாகக் கிடைத்த செய்தியை ஆதாரமாகக்கொண்டு அச்செயலை வன்மையாகக் கண்டித்ததுடன், அந்தப் பொருள் தம்மீதே எறியப்பட்டதாகத் தாம் கருதுவதாக அறிவித்து வருந்தி அறிக்கை வெளியிட்டவர்தான் எம் முன்னேற்றக் கழகத்தின் தலைவர்.

கடமையும் உரிமையும்!

சர்தார் படேலுக்கும்—வெளிப்படையான பேச்சுக்கும் நிரம்ப ஒற்றுமை உண்டு. படேல் பேசுகிருர் என்ருல், அதில் அரசியல் சூது – உள் நோக்கம் – வஞ்சம் எவையும் இருக்காவென்பதில் யாருக்கும் நம்பிக்கை உண்டு.

அத்தகைய பெருந்தகையாளரின் பெயரால் அழைக்கப்படும் சென்னை–சேப்பாக்கம் படேல் சதுக்கத்தில் பேசிய திரு. சி. சுப்பிரமணியம் மாணவர்களைச் சமாதானப்படுத்தும் வகையில் பேசிய பேச்சையும், அத்தகு மரியாதையோடு நாம் பாராட்டுவோம்.

எதிரும் புதிருமாக நின்று மோதிக்கொண்டவர்களால், உலகம் அவ்வளவாகப் பாழ்படவில்லை. எச்சாராருக்கும் நல்லவர்களாக நடக்கவிரும்பும் சலனபுத்தி படைத்தோராலும், ஒரு கூடாரத்திலிருந்து மற்ருென்றுக்கு சேதி சேகரிக்கும் ஒற்றர்களாலுமே பெருமளவுக்கு அழிவு நேர்வது கண்கூடு.

காங்கிரசுக் கட்சியும் தன்னை ஒற்றர் அல்லது இந்தி வெறியர்களுக்கு ஆதரவான ஏஜெண்டு நிலையிலிருந்து மாற்றிக்கொண்டு, வெளிப்படையான கருத்தை வீரமாகத் தெரிவிக்க முன்வர வேண்டும்.

'இந்திதான் வேண்டும்; அதுதான் தமிழைவிட உயர்ந்தது' என்று சொல்வதற்கு எந்தக் காங்கிரசுவாதி விரும்பினுலும், அதனை அப்படியே வெளிப்படையாகச் சொல்வதில் தவறில்லை. ஆனுல், அத்தகு வீரம் காங்கிரசுவாதிகளிடத்தில் காணப்படாததுதான் வருந்தக்கூடியதாகும்.

ஒன்று — காங்கிரசார், இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும்; அல்லது ஆதரிக்கவேண்டும். சனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த இரு முனைகளில்தான் காங்கிரசை எதிர்பார்க்கிருர்கள்.

'நடுநிலைமை' என்பது, நமது வெளிநாட்டு உறவுகளில் தோல்வியைக் கொடுத்தது போலவே, உள்நாட்டிலும் கொந்தளிப்பை உருவாக்கும் என்பதைக் காங்கிரசார் விரைவில் உணர்ந்து ஓர் முடிவுக்கு வந்தாக வேண்டும்.

படேல் சதுக்கத்தில் பேசிய திரு. சுப்பிரமணியம், மாணவர்களைப் பற்றித் தாம் குறிப்பிட்டதற்கு வெளிப்படையாக வருத்தம் தெரிவித்த நேர்மைப் போக்கிலேயே இந்தித் திணிப்புப் பற்றித் தமிழகக் காங்கிரசு கொண்டுள்ள திட்டவட்டமான முடிவையும் இனிவரும் நாட்களில் தெரிவித்துவிட வேண்டும் என்பதே நம் அவா!

நேற்றைக்கு முன்னுள் நாடாளுமன்ற மேலவையில் பேசிய தமிழகத்துக் காங்கிரசு உறுப்பினர் ஆர். டி. பார்த்தசாரதி என்பவர், தமிழகத்தின் மொழித் தீர்மானத்தில், ஆங்கிலத்தை நீக்கிவிட்டதாகத் தவறுதலான விவரங்களைப் பேசியிருக்கிருர். இந்தியை நீக்கியதைச் சொல்வதற்கு வெட்கப்பட்டு அல்லது பயப்பட்டு, ஆங்கிலத்தை நீக்கியதாகக் குற்றஞ்சாட்டுவது முறையா என்பதை, தமிழகக் காங்கிரசு தெளிவுபடுத்த வேண்டும்.

> **"ஆங்கிலம் அந்நிய மொழி; அது நெடு நாட்களுக்கு நம் ஆட்சி மொழியாகவோ, பயிற்சி மொழியாகவோ இருக்கக்கூடாது; இந்திதான் அதன் இடத்தை நிரப்ப வல்லது"**

என்று, தமிழகச் சட்டமன்றத்தின் மொழித் தீர்மானத்திற்கு முன்பு பேசிவந்த தமிழகக் காங்கிரசார், இப்போது,

> **"ஆங்கிலம் போச்சு; அதன் இடத்தைப் பிடிக்க ஆகுமா தமிழால்? அனைத்துலகத் தொடர்பு என்னுவது?"**

என்று மூலைக்கு மூலை அலறுவதில் பொருளிருக்கிறதா என்பதை, சுப்பிரமணியம் அவர்கள் விளக்கவேண்டும்.

'ஆங்கிலத்தின் இடத்தை இந்தி நிரப்பும்' என்று பெருநம்பிக்கை தெரிவித்து வந்த காங்கிரசார், அந்த இடத்தை தமிழ் ஏன் நிரப்பமுடியாது என்பதை விளக்கவேண்டாமா?

'தமிழால் முடியும்' என்று நூல் போட்டு விற்பனை செய்த சுப்பிரமணியம் அவர்கள், அதை அரசியல்—பயிற்சி மொழி விவகாரத்தில் இலாயக்கற்றதாக வர்ணித்துக் கொண்டிருப்பதைக் கைவிடுவாரா?

மாணவர்கள் பற்றித் தாம் தெரிவித்த கருத்தை திரும்பப் பெற்றுக்கொண்ட சுப்பிரமணியம் அவர்களின் பெருந்தன்மையைப் பாராட்டுகிருேம்; அதேபோல், 'தமிழர்களுக்கும்—தமிழ் மொழிக்கும் இனித் துரோகம் செய்வதில்லை' என்ற உறுதியையும் அவர் மேற்கொள்ளவேண்டும் என விரும்புகிருேம்.

அவர், தமிழராகப் பிறந்துதான் இந்தியக் குடிமகனுகி இருக்கிருர்; எனவே அவர், தமது குடிநலனைத் தமிழகத்தில் பேணவேண்டும்; தமது குடி உரிமையை இந்தியாவில் நிலைநாட்ட வேண்டும்.

'கடமையைச் செய்துவிட்டே உரிமையைக் கோரவேண்டும்' என்று காந்தியடிகள் வலியுறுத்திச் சொல்லியிருப்பதைக் கடைபிடிப்பதில் திரு. சுப்பிரமணியம் தவறமாட்டார் என்பதை நம்புவோம்!

—தோழன்

இருபதாண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியில், கழக வளர்ச்சியைக் குலைக்க அதிகார முனையிலும், கட்சி முனையிலும் காங்கிரசுக் கட்சியினர் நடத்திய கொடுந் தாக்குதல்கள் ஏராளம், ஏராளம்! ஆத்திரமூட்டப்பட்ட செயல்கள் கணக்கிலடங்கா! ஒதுங்கிக் கிடந்ததுகளையும், ஒளிந்துக்கிடந்ததுகளையும் ஒருங்கு திரட்டி--'சுதந்தரம் காக்கும் படை' என்ற பெயரும் சூட்டி---அக்கயவர்களின் படையைக் கழகத்தவர்மீது காங்கிரசு ஆட்சியினர் ஏவிவிட்ட பாசிச வெறித்தனத்தை, 'தாக்குவர்–தாங்கிக் கொள்ளுங்கள்' என நல்லுரை கூறி, கழகத்தவரிடம் அறநெறியை வளர்த்துவந்த புகழுக்குரியவர் எம் கழகத் தலைவர்.

வன்முறைச் செயலை அரசியல் கருவியாகக் கழகம் கொண்டிருக்கும்பட்சத்தில், ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்குக் கழகம் வளர்ச்சி பெற்றிருக்க முடியாது; மக்களின் நம்பிக்கையையும் நல்லாதரவையும் கழகம் பெற்றிருக்கவும் முடியாது.

'வன்முறையை அரசியல் கருவியாகக் கொண்டிருக்கிறது கழகம்' எனக் கூறி, தங்கள் இருபதாண்டுக்கால ஆட்சியில், கழகத்தை என்ருே இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட்டிருப்பர்--காங்கிரசுக் கனவான்கள்!

வன்முறையில் அல்ல கழகம் வைத்துள்ள நம்பிக்கை---மக்கள் வாக்குரிமையில்தான். இம்மாபெரும் உண்மையை சுப்பிரமணியம் மட்டும் அல்ல---அவர் போன்ற மற்ற காங்கிரசுக் கட்சியினரும் தங்கள் மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த முறையில், அறநெறியில் நம்பிக்கை வைத்து---வன்முறையை அறவே வெறுத்து---அவ்வப்பொழுது காங்கிரசுக் கட்சியினர் ஏவிய வன்முறைச் செயல்கள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு---மக்கள் மன்றத்தில் செம்மையாக இயங்கிவருகின்ற அரசியல் அமைப்பான முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, 'நடைபெற்றுள்ள வன்முறைச் செயல்களுக்கெல்லாம் முன்னேற்றக் கழகம்தான் காரணம்; இதற்கு நம்பகமான தகவல் என்னிடம் இருக்கிறது' என சுப்பிரமணியம்கூறியுள்ளதை, 'தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் கூறுகிருர்' என்பதற்காகத் தமிழகம் நம்பத் துணியுமா? களங்கம்தான் கழகத்தைப் பற்றிக்கொள்ளுமா?

'கழகத்தைக் குறித்து சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருப்பது பொருந்தாக் கூற்று -- மெய் கலவாத பொய்க் கூற்று' என்றுதான் தமிழ்மக்கள் முடிவு கட்டுவர்! தமிழ் மக்கள் மதிப்பில், சுப்பிரமணியம் அவர்கள் மாற்றுக் குறைந்தவராகக் காட்சி தருவார்.

—கா. க.

சென்னையிலிருந்து செஞ்சிக்கு அரசு பஸ்

கட்டணங்களில் நிலவும் வேறுபாடு நீக்கப்படும்

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணநிதி விளக்கம்

சென்னை, பிப். 16—

"சென்னைக்கும் – செஞ்சிக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் தனியார் பஸ்சின் உரிமம் 21-2-68-ல் முடிவடைகிறது; அது முடிந்ததும், அந்த வழித்தடம் அரசினுல் மேற்கொள்ளப்பட்டு அரசுப் போக்குவரத்தின் சாதாரண பஸ் விடப்படும்"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் வி. முனுசாமி கேட்ட கேள்விக்குப் பொதுப்பணியமைச்சர் திரு. மு. கருணநிதி பதிலளித்தார்.

மேலும் பல துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:—

"அந்த வழியில் விரைவுப் பேருந்து விட்டால் 35 இருக்கைகள்தாம் இருக்கும்; கட்டணமும் அதிகமாக இருக்கும். சாதாரண பேருந்துக்குக் கட்டணம் அதிகமாக இருக்காது.

"ஒரே வழித் தடத்தில் ஓடும் தனியார் பஸ்களுக்கும் – அரசினர் பஸ்களுக்கும் கட்டண ஏற்றத்தாழ்வு இருப்பதற்குக் காரணம், தனியார் துறை

(3-ம் பக்கம் பார்க்க)

‘காங்கிரசுக்கு இனித் தமிழகத்தில் இடமில்லை’

‘காட்டிக்கொடுக்கும் தொழிலை அவர்கள் விட்டுவிடட்டும்’

தமிழறிஞர் தேவநேயப் பாவாணர் அறிவுரை

“இனிமேல் காங்கிரசுக் கட்சிக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை; தமிழ்நாடு விழிப்படைந்துவிட்டது; எத்துணைச் சூழ்ச்சி செய்யினும், தமிழாசிரியரும் தமிழ் மாணவரும் காங்கிரசு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற விடார்; ஆதலால், தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவரும், தொண்டரும், மாணவரும் காட்டிக்கொடுக்கும் தொழிலை அடியோடு விட்டுவிட்டுத் தி.மு. கழகத்துடன் சேர்ந்து தமிழ்நாட்டுக்குப் பாடுபடுவாராக”

என்று, மொழி நூலறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் இடித்துரைத்து அறிவுரை கூறியிருக்கிறார்.

அவரைப் பற்றித் தவறான தகவலை வெளியிட்ட ஏட்டுக்கு மறுப்புரைக்கும் வகையில் அவர் எழுதியுள்ளதாவது:—

“என் நண்பர் திரு. கருணை (‘தமிழ்ப் பாவை’ ஆசிரியர்) என் பார்வைக்கு விடுத்த ‘குறிஞ்சி’ என்னும் கிழமை இதழின் இம்மாத 7-ஆம் பக்க வெளியீட்டில், ‘அண்ணாதுரைக்கு தி.மு.க. பேராசிரியர் சவால்’ என்னும் தலைப்பின் கீழ், ‘தென்மொழி’யில் நான் எழுதியதாக வெளிவந்துள்ள ஒரு முழுப் புரளிச் செய்தியைக் கண்டு துணுக்குற்றேன், திகைப்புற்றேன்.

‘தென் மொழி’யொடு எனக்குள்ள தொடர்பு நீங்கி ஈராண்டாகின்றது; இன்றுள்ள தொடர்பெல்லாம், அதன் இதழ்கள் எனக்கு முன்போல் வந்துகொண்டிருப்பதே; இதற்குக் கரணியம், அதன் ஆசிரியர்க்கு நான் சேலம் கல்லூரியில் ஆசிரியனாயிருந்தமையே!

‘தென் மொழி’யொடு தொடர்பு கொண்டிருந்த காலத்தும், சில கட்டுரைகளும வினாவிற்கு விடைகளும் விடுத்தேனேயன்றி, ஆசிரியவுரை (தலையங்கம்) ஓரிதழிலும் வரைந்தேனல்லேன்; ‘சிறப்பாசிரியன்’ என்று என்னைக் குறித்தது அவ்விதழ் மிகுந்து பரவுதற்கே. இதழ், தனித் தமிழ் வெளியிடாதலாலும், அதன் ஆசிரியர் என் பழைய மாணவராதலாலும், கண்ணோட்ட முகமாக அதற்கு இசைந்தேன்.

1966-இல் வெளிவந்த ‘கோலாலம்பூரில் கோடன்மார் கூத்து’ என்பதும் என் கண்டனக் கட்டுரையன்றி, ஆசிரியவுரையன்று. அன்று இதழாசிரியர் சிறைப்பட்டிருந்ததால் ஆசிரியவுரை வரையப்பெறவில்லை.

எனக்குத் ‘தென் மொழி’த் தொடர்பு நீங்கியபின்பும் சிலர்க்கு அதுபற்றி ஐயுறவிருந்ததால் அதை அகற்றுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்கி, ‘தென் மொழி’ ஆசிரியரும், எனக்குத் ‘தென் மொழி’யொடு தொடர்பில்லை என்றும், அதில் வெளிவரும் ஆசிரியவுரைகட்குயான் பொறுப்பாளியல்லேனென்றும், சென்ற ஆண்டிலேயே திட்டவட்டமாய்த் தெரிவித்துவிட்டார்.

அதையுங்கவனியாது, ‘குஞ்றிசி’ ஆசிரியர், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடர்பாக நிகழ்ந்த ஊர்வலம் பற்றிப் பெருஞ்சித்திரனார் வரைந்த உரையை என் மேலேற்றிக் கூறியிருப்பது, எத்துணைத் திண்ணக்கமும், நெஞ்சமுத்தமுமான பொய்யும், புரட்டுமாகும்! இதுபற்றி மானக்கேட்டு வழக்குத் தொடுத்தால் அவர் எங்ஙனந் தப்பமுடியும்?

இத்தகைய புன்சிறு புனைசெய்திகளையேபடைக்கலமாகக்கொண்டு தி. மு க. ஆட்சியை வீழ்த்திவிடலாமென்று அவர் கனாக் காண்கின்றார் போலும்! இக்கருத்தை அடியோடு விட்டுவிட்டு, ‘பேராயம்’ (காங்கிரசு) ஏன்சென்ற தேர்தலில் மண்டை வெடிக்க வீழ்ந்து மண் கவ்விற்று’ என ஆய்ந்து—தமிழ் பிழைத்தோர்க்குத் தமிழ் கூற்றுவதென்று கண்டு—தெளிந்து—இனி மேலேனும் தாய்மொழியைப் பேணி—இந்தியொழிந்த இருமொழித் திட்டத்தை மேற்கொண்டு, தமக்கும் தமிழ் நாட்டிற்கும் உண்மையான விடுதலையையும் முன்னேற்றத்தையுந் தேடுவாராக!

இந்திய ஒருமைப்பாட்டை எள்ளளவும் குலைய விடோமென்றும், தமிழ்நாடு பிரியின் தலைகொடுத்துத் தடுப்போமென்றும், இந்தி ஆட்சியால் ஏதும் இழிவில்லையென்றும் வாய்க்கு வந்தவாறு ஏதேதோ பிதற்றிக் கொண்டு திரியும் பேதைகட்கு உண்மை நிலையுணர இன்னும் நாலாண்டு வேண்டும் போலும்!

‘ஜெயபேரிகை’ என்னும் பேராய இதழிலும், நவம்பர் வெளியீட்டில், அதன் ஆசிரியர் தென்மொழிப் பெருஞ்சிதிரனார் கூற்றை எனதாக வெளியிட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இவ்விருவர் குற்றத்தையும் முதன்முறையாதலால் வருத்தத்தோடு மன்னிக்கின்றேன்; மறுமுறை செய்யின், மான இழப்பு வழக்குத் தொடுக்க நேரும் என்று எச்சரிக்கின்றேன்.

தி.மு.க. ஆட்சியில் ஏதேனும் குற்றங்குறையிருப்பின், அதை நான் நேரடியாகவும், வெளிப்படையாகவும் தெரிவிப்பேனேயன்றி, மறைமுகமாகப் புனைபெயரில் என் தொடர்பு நீங்கிய இதழில் எழுதேன்.”

திருத்துறைப்பூண்டித் தொகுதியில் வடிகால் திட்டம்

தனி அதிகாரி ஆய்வு நடத்துகிறார்

சென்னை, பிப். 16—

“திருத்துறைப்பூண்டித் தொகுதியில் சுமார் 7,000 ஏக்கர் பயிர் நிலம் வடிகால் வசதியில்லாததால் நீரில் மூழ்கிச் சேதமடைவதைத் தடுக்கக் கோரி அரசுக்கு வந்த கோரிக்கையையொட்டி அதற்கான வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது; ஆய்வு முடிந்ததும் அதற்கான திட்டம் வகுக்கப்படும்”

என்று கழக உறுப்பினர் ந. தர்மலிங்கம் கேள்விக்கு பொதுப்பணியமைச்ரர் திரு. மு. கருணாநிதி பதிலளித்தார்.

அவர் மேலும் கேள்விகட்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

“தஞ்சை மாவட்டத்துக்கென வடிகால் வசதியைக் கவனிக்கும் பொருட்டு தனி அதிகாரி 1—9—66-ல் நியமிக்கப்பட்டும், அவர் வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். 1—9—66-க்குப் பிறகுதான் அவரை இந்த வேலையைக் கவனிக்கும்படி உத்தரவிடப்பட்டது. அதன் பிறகு இந்த அரசு, வடிகால் திட்டம் பற்றி ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்டுக்கொண்டது. அறிக்கை 31-3-68-க்குள் கிடைத்துவிடும். அதன் பிறகு ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.”

கோடம்பாக்கத்தில் பேராசிரியர் அன்பழகன் பூங்கா

அமைச்சர் முத்துசாமி திறந்துவைத்தார்

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் டிரஸ்ட்புரத்தில் மாநகராட்சிமன்றம் அமைத்துள்ள அழகிய பூங்காவை, உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் திறந்துவைத்து, அந்தப் பூங்காவிற்கு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் பெயரையும் சூட்டினார்.

இந்த விழா, 10—2—68-ல், மேயர் அபிபுல்லா பேக் அவர்கள் தலைமையிலும் — 92-வது வட்ட முன்னாள் கிளைக் கழகச் செயலாளர் திரு. எம். எஸ். இராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

வட்ட மாநகராட்சி உறுப்பினர் திரு. சா. கணேசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், வட்டத்திற்கான தேவைகளையும், அவற்றை நிறைவேற்றிவைக்க மாநகராட்சி மன்றம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளையும் எடுத்துரைத்தார்.

தோழர் எம். எஸ். இராமச்சந்திரன் பேசுகையில், வட்டத்தில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்த போதிலும், பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவு பெறாத ஒரு காரணத்தாலேயே மாநகராட்சி உறுப்பினர்மீது சிலர் குறைபட்டுக் கொள்ளும் நிலைமை இருக்கிறது என்றும், விரைவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை முடித்துக் கொடுக்க மேயரும், ஆணையரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மேயர் பேசுகையில், வளர்ச்சி பெற்ற வட சென்னை மிகவும் மக்கள் நெரிசலான பகுதியாக இருக்கிறது என்றும், புதிதாக வளர்ச்சி பெறும் தென் சென்னை நல்ல சுகாதார வசதியுடன் வசிக்கக்கூடிய பகுதியாக அமைந்து வருகிறது என்றும், இப்படிப்பட்ட பூங்காக்களும், விளையாட்டுத் திடல்களும் மாநகராட்சியால் தென் சென்னையில் அதிக அளவில் ஏற்படுத்தப் படுவதாகவும், இந்த அளவுக்கு வடசென்னையில் இடம் கிடைக்க வில்லை என்றும் கூறினார்.

பூங்காவைத் திறந்துவைத்துப் பேசிய அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், ஏழை மக்கள், தங்களுக்குக் கிடைக்கும் சிறிது ஓய்வு நேரத்தைக் கழிக்கவே இப்படிப்பட்ட அழகான பூங்காக்களை மாநகராட்சி ஏற்படுத்தி வருகிறது என்றும், இதனை மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டு, இந்த வட்டார மாநகராட்சி உறுப்பினர் சா. கணேசனின் சிறந்த முயற்சியையும், பணிகளையும் பாராட்டினார்.

“அன்பொழுகக் காணப்படும் இந்த வட்டாரத்து மக்களுக்கென அழகான இந்தப் பூங்காவை எல்லோருடைய அன்பையும் பெற்றுள்ள நண்பர் சா. கணேசன் ஏற்படுத்தியிருக்கிறார்; அதன் அடையாளமாக, அன்பும் அழகும் இணைந்த ‘அன்பழகன்’ என்ற பெயருடைய பேராசிரியர் அன்பழகன் அவர்களின் பெயரை இந்தப் பூங்காவுக்குச் நான் சூட்டுகிறேன். இந்தப் பெயரை மாநகராட்சி முறைப்படி ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன்”

என்று அமைச்சர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

இறுதியாக மாநகராட்சி ஆணையர் திரு. அம்பாசங்கர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், கோடம்பாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம், மேயர் அறிவித்தவாறு இராண்டாண்டுக் காலத்தில் முடிய முயற்சி எடுத்துக் கொள்வதாகக் கூறினார்.

அமைச்சருக்கும், மேயருக்கும், மாநகராட்சி உறுப்பினருக்கும் இந்த வட்டத்தைச் சேர்ந்த கலைஞர் கருணாநிதி மன்றம்—கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் —வட்ட தி. மு. க. கிளை ஆகியவை சார்பில் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

இனி அரசுத் துறையில் காகித ஆலை இல்லை

தனியார் துறையில் நிறுவினாலும் போதிய மூலப்பொருள் கிடைப்பது அரிது

சென்னை, பிப். 16—

“வால்பாறையில் காகித ஆலை ஒன்றை நிறுவும் செயற் குறிப்பு எதுவுமில்லை”

என்று, சட்டமன்றத்தில் தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழக உறுப்பினர் இ. இராமசாமி கேள்விக்குப் பதிலளித்தார்.

தொடர்ந்து பல துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

‘அந்தப் பகுதியில் காகித ஆலை வைக்கவேண்டுமென்றால் அதற்குத் தேவையான மூங்கில் தொடர்ந்து கிடைக்காது; இருக்கின்ற மூங்கிலும், கூடை—முறம் முடைவதற்கும், வீடு கட்டுவதற்கும், இன்ன பிற காரியங்களுக்கும் தேவைப்படுகிறது. ஏற்கனவே காவிரிக்கரையில் உள்ள காகித ஆலைக்கே போதுமான மூங்கில் கிடைக்கவில்லை. காவிரிககரையில் கிடைக்கும் மூங்கிலையும் வால்பாறைக்குக் கொண்டுவந்துவிட்டால் காவிரிக்கரைக் காகித ஆலையில் வேலையில்லாமல் தொழிலாளர்கள் வீட்டுக்குப் போகும் நிலை ஏற்படும். காவிரிக்கரையில் உள்ள காகித ஆலையில் அரசின் பங்கு 51 சதவிகிதம் இருந்த போதிலும், அரசே அதனை ஏற்று நடத்துமாறு கோரிக்கை எதுவும் வரவில்லை. அந்த ஆலைக்கும் —காட்டிலாகாவுக்கும், மூங்கில்கள் சப்ளை செய்வது சம்பந்தமாக ஒப்பந்தமாகியிருக்கிறது.

“ஏற்கனவே, ‘இனி காகித ஆலை எதுவும் அரசுத் துறையில் வைக்கவேண்டாம்’ என மத்திய அரசு அறிவித்திருக்கிறது. தனியார் துறையினர் முன்வந்தால் அமைக்கலாம். அப்படி இரண்டு மூன்று பேருக்கு அனுமதி கொடுத்தும் இன்னும் துவக்காமல் இருக்கிறார்கள். பாபனாசம் பகுதியில் 30 டன் உற்பத்தித் திறனுள்ள ஆலைக்கு அனுமதி கொடுத்து, பின்னர், ‘போதிய மூங்கில் கிடைக்காது’ என்பதால், 10 டன் உற்பத்திச் சக்தி கொண்டதாக அது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

“கரும்புச் சக்கை மூலமும் காகிதம் செய்யலாம்; ஆனால் போதிய கரும்புச் சக்கை கிடைக்காது.”

சென்னை 74-வது வட்ட தி. மு. கழகம்

சென்னை 74-வது வட்டக் கிளையில் ஏற்பட்ட இரு பொறுப்புக்களுக்கான தேர்தல், 16—1—68 மாலை 4-30 மணிக்கு பகுதித் துணைச் செயலாளர் தோழர் சி. ஆதிகேசவன் தலைமையில் நடைபெற்றது: அதுபோது, க. நடராசன் செயலாளராகவும், கிருஷ்ணன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பஸ் உரிமையாளர்கள் மாநாட்டில் ஒப்புக்கொண்ட கட்டண விகிதம் செயல்படுத்தப்படாமையேயாகும். கிலோமீட்டருக்கு அரசினர் பஸ்சில் 2 காசு வீதமும், தனியார் பஸ்சில் 3 காசு வீதமும் இருந்தது. தனியார் துறை பஸ்களின் கட்டணத்தை 2½ காசாகக் குறைக்கவேண்டும் என்றும், அதே நேரத்தில் அரசினர் பஸ் கட்டணத்தை 2½ காசாக உயர்த்த வேண்டும் என்றும் ஒரு சமரச ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது; அதன்படி சில தனியார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்படாமலும், சில அரசினர் பஸ்களில் உயர்த்தப்படாமலும் இருப்பதால் இந்த ஏற்றத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது; விரைவில் இந்த நிலைமை சீர்படும்.”

தமிழக அரசின் மொழிக் கொள்கைக்கு பாராட்டு

மத்திய அரசின் போக்குக்குக் கண்டனம்

திருப்புத்தூர் தமிழ்ச் சங்கப் பேரவைத் தீர்மானங்கள்

திருப்பத்தூர் தமிழ்ச் சங்கம்—புலவர் பேரவையின் செயற்குழு, 7—2—68-ல் குன்றக்குடியில், குன்றக்குடி அடிகளார் தலைமையில் கூடியபொழுது தமிழக அரசின் மொழித் தீர்மானத்தைப் பாராட்டிப் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

“இந்திய நாடு பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வாழும் நாடு; இத்தகையதொரு நாட்டில் ஒரு மொழியை வலுக்கட்டாயமாக நடுவண் அரசின் அலுவலக மொழியாக்கி, இந்தியை இந்தி பேசாத மக்களின்மீது திணிப்பது மக்கள் ஆட்சி மரபுக்கு மாறுபட்டது. ‘இந்தித் திணிப்பு இருக்காது’ என்று நேரு பெருமகனார் கொடுத்த வாக்குறுதியையும் மீறி இந்தியப் பேரரசு, இந்தியைத் திணிக்கும் நோக்கத்துடன் சட்டமும்—தீர்மானங்களும் செய்திருப்பதை வருத்தத்துடன் கண்டிக்கிறது.

அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பெற்றுள்ள மொழிச் சட்டத்தையும் தீர்மானங்களையும் கைவிடும்படி இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

தலைமையமைச்சர் — இந்தி பேசாத மாநில முதல்வர்கள்—அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியவர்கள் அடங்கிய வட்ட மேசை மாநாட்டைக் கூட்டி மொழிச் சிக்கலுக்கு மனநிறைவு பெறக்கூடிய வகையில் தீர்வு காணும்படி தலைமையமைச்சரைக் கேட்டுக்கொள்கிறது.

இன்று தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும் அரசு, ‘தமிழ் அரசு—தமிழர்கள் அரசு; தமிழினத்துக்கும், தமிழகத்துக்கும் அரண் செய்யும் நல்ல அரசு’ என்று பாராட்டுகின்றது.

மத்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து மறுக்கும் வகையில் தமிழகச் சட்டமன்றத்தில் தமிழக அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறது.

இந்தி எதிர்ப்பு தமிழ்ப் பாதுகாப்பில் இன்றையத் தமிழக அரசு ஒரு எழுச்சிமிக்க புதிய வரலாற்றைத் துவங்கி வைத்திருக்கிறது. இந்தப் புதிய திருப்பத்தில் தொடங்கும் தமிழர் படை, இந்தி எதிர்ப்பில் வெற்றி காணும்வரையில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கட்டுப்பாட்டுடன் போராடும் என்ற உறுதியை இந்தத் தமிழ்ச் சங்கம் கொண்டிருக்கிறது.

‘தமிழ் வளரும் மொழி—அது வளரவேண்டும்—உலக மொழியாகப் பல கலைகளிலும் வளர்ந்து செழிக்கவேண்டும்’—இந்த இனிய-அரிய நோக்கத்துடன் தமிழைப் பயிற்று மொழியாக்கத் தமிழக அரசு முடிவெடுத்திருப்பதற்கு இச்சங்கம் தனது மகிழ்ச்சிகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்ப் பயிற்று மொழிக் கொள்கையை விரைவில் நிறைவேற்றித் தரும்படி தமிழக அரசை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

தமிழ் மாநாட்டு அஞ்சல் வில்லையில் மட்டும் இந்தி ஏன்?

நாடாளுமன்ற மேலவையில் வி. வி. இராமசாமி வினா

'வள்ளுவர், பாரதி நினைவு அஞ்சல் பற்றிய விவரம் இல்லை' என அமைச்சர் மழுப்பல்

புதுடில்லி, பிப். 16—

"முன்பு திருவள்ளுவர், பாரதியார், தியாகராசர் ஆகியோரின் நினைவாக வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் வில்லைகளிலெல்லாம் இந்தி எழுத்தில்லாதிருந்தும், உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் வில்லையில் மட்டும் இந்திச் சொற்கள் திணிக்கப்பட்டதேன்? இது, வேண்டுமென்றே செய்யப்பட்டதல்லவா?"

என்று, நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் திரு. வி. வி. இராமசாமி கேட்டார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் டாக்டர் இராம் சுபாக் சிங், 'முன்பு வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் வில்லைகள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்குமுன் எதுவும் சொல்வதற்கில்லை' என்று மழுப்பியதுடன், 'வருத்தப்படக்கூடிய முறையில் நாங்கள் எதுவும் செய்துவிடவில்லை' என்றும் இறுமாப்புடன் கூறியிருக்கிறார்.

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக வெளியிட்ட அஞ்சல் வில்லைக்குத் தமிழக அரசு அனுப்பிய மாதிரிச் சின்னத்தையே அச்சிட்டுள்ளதாகவும், சென்ற சனவரி 3-ம் நாள் அந்த அஞ்சல் வில்லை வெளியிடப்பட்டதாகவும் நாடாளுமன்ற மேலவையில் செய்தி—போக்குவரத்து அமைச்சர் டாக்டர் இராம் சுபாக் சிங் கூறினார். தமிழக அரசு அனுப்பிய சின்னத்தில் 'திருக்குறள்' என்னும் சொல் மாத்திரமே தமிழில் இருந்ததாகவும் மற்றச் சொற்கள் ஆங்கிலத்தில் இருந்ததாகவும் அவர் கூறினார்.

"ஆங்கிலச் சொற்களும், தமிழ்ச் சொற்களும் மாத்திரமே அடங்கிய சின்னத்தைத்தானே அனுப்பியது?" என்று ஓர் உறுப்பினர் கேட்டார்.

டாக்டர் இராம் சுபாக் சிங்:—"இந்தி, ஆங்கிலம் இவ்விரண்டும் ஆட்சிமொழிகள் என்பதாக நாடாளுமன்றம் திட்டவட்டமான கொள்கையை அறிவித்திருப்பதால், அந்தக் கொள்கைக்கு விரோதமாக என்னால் நடந்து கொள்ள முடியாது."

"தமிழிலேயே நாங்கள் சின்னத்தைப் பெற்றிருந்தால், அந்த மொழியிலேயே சின்னத்தை வெளியிடத் தயங்கியிருக்க மாட்டோம்; ஆனால் தமிழக அரசு சின்னத்தைத் தமிழில் மாத்திரம் அனுப்பவில்லை."

உலகத் தமிழ் மாநாடு நினைவாக அஞ்சல் வில்லை வெளியிடும் விழா சன. 3-ம் நாள் நடைபெறுவதாக இருந்ததை, தமிழக முதலமைச்சர் ரத்துச் செய்ததைப் பற்றி ஓர் உறுப்பினர் கேட்டார்.

அஞ்சல்—தந்தித்துறைத் துணை அமைச்சர் குஜ்ரால் பின்வருமாறு பதில் கூறினார்:—

"சம்பந்தப்பட்ட குறள் தமிழில் இருப்பதற்குப் பதில் ஆங்கிலத்தில் மாத்திரம் இருந்ததற்காகவே விழா ரத்துச் செய்யப்பட்டது. அத்துடன், அப்போது அந்த அஞ்சல் வில்லையை வெளியிட்டால் குழப்பம் ஏற்படலாம் என்று முதலமைச்சர் அஞ்சியதாகவும் தெரியவந்தது.

"மொத்தம் 20,66,294 வில்லைகள் அச்சிடப்பட்டன; அவற்றில் 12,71,467 வில்லைகள் விற்பனையாகியிருக்கின்றன. இந்த அஞ்சல் வில்லை, தமிழக முதலமைச்சரின் யோசனைக்கிணங்கவே வெளியிடப்பட்டது.

"வருத்தமும் எரிச்சலும் ஏற்படாமல் இருப்பதற்கு இனியாவது சிறப்பு அஞ்சல் வில்லைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை மாநில அரசின் விருப்பத்துக்கு விடப்படுமா?" என்று ஏ. டி. மணி கேட்டார்.

இந்த யோசனையைச் சில உறுப்பினர்கள் ஆட்சேபித்து, 'கூடாது, கூடாது' என்று முழக்கமிட்டனர்.

டாக்டர் இராம் சுபாக் சிங் பின்வருமாறு பதில் கூறினார்:—

"தமிழக அரசு அனுப்பிய மாதிரியில் மாறுதல் செய்யப்படவில்லை; ஆகவே உறுப்பினர் தெரிவித்துள்ள யோசனையை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை."

மத்திய--மாநில உறவு: மறு ஆய்வு தேவை!

சென்னை, பிப். 16—

"முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் மாநில—மத்திய உறவு பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாததாகிறது.

"மாநில அமைச்சரவைகளை, உள்ளாட்சி மன்றங்களைப் போல நடத்தக்கூடாது.

"மாநிலங்கள் விவகாரத்தில் மத்திய அரசு தாராளப் போக்குடன் நடந்துகொள்ளவேண்டும்.

"தென்னாட்டில்—ஐதராபாத் போன்ற இடங்களிலாவது மத்திய அரசின் அமைச்சரகங்கள் இயங்கவேண்டும்.

"மத்திய அரசின் ஊழியர்களை நியமிப்பதில் புதிய முறையை மேற்கொள்ளவேண்டும்."

--டாக்டர் இலட்சுமணசாமி

(மேலவையில்)

மக்கட் தொகை அடிப்படையில்

அரசு ஊழியர் நியமனம்

புதுடில்லி, பிப். 15—

"மாநிலங்களின் மக்கட் தொகை அடிப்படையில், அனைத்திந்திய அரசு நிர்வாகத்துக்கான ஊழியர்களை நியமிக்கவேண்டும்"

என்று ஆந்திரத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினரான திருமதி அம்மண்ணராசு, நாடாளுமன்ற மேலவையில் பேசுகையில் யோசனை கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தினால் இந்தி பேசாத மக்களிடை ஏற்பட்டுள்ள உணர்ச்சியை மதித்து மத்திய அரசு நடந்துகொள்ள வேண்டும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுவது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

18--2--68

தஞ்சை

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: டி.கே. சீனிவாசன்; பேசுவோர்: மு. கருணாநிதி, ப, உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி.

நெயவேலி

செல்வராசு மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு திரு.வி.க. திடலில்; தலைவர்: எஸ். இராமச்சந்திரன் பி.இ., எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் முத்துசாமி, ஏ.எம். இராசா எம் ஏ. எம்.எல். செல்வி கஸ்தூரி பி.எஸ்சி.

புதுக்கோட்டை

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: ஜி. வெங்கடாசலபதி எம்.சி; பேசுவோர்: நன்னிலம் நடராசன், அ. தியாகராசன், எம்.எஸ், அப்துல் மஜீது, சோம. காசிநாதன், பா. செழியன்.

திருவரங்கம்

அண்ணா அறிவகம்—எம்.ஜி. ஆர். மன்றம் ஆகியவற்றின் முதலாவது ஆண்டு விழா; மாலை 6 மணிக்கு வீரேசுவரம் மேலவீதியில்; தலைவர்: சி.ஜே. நாதன்; பேசுவோர்: அன்பில் தர்மலிங்கம், ஆர். நாகசுந்தரம் எம்.எல். ஏ., எம்.எஸ். மணி எம்.எல்.ஏ., சு. நெடுமாறன், எஸ்.எம்.வி. சாமி, மு. நடராசன், சி. இராதா. (மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி உண்டு.)

19--2--68

கரூர்

9-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு கிருஸ்துவர் தெருவில்; தலைவர்: எம். சாலமோன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., என்.ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம், கே.ஜி, உமாகாந்தன்.

தஞ்சையில்

அமைச்சர்

மு. கருணாநிதி

நிகழ்ச்சிகள்

18—2—68—காலை 8 மணி: அண்ணா பிறந்தநாள் விழா—பூப்பந்தாட்டப் போட்டி - பரிசளிப்பு; நகராட்சி அலுவலக மைதானம்; 10 மணி: அண்ணா கவியரங்கம்—இராமநாதன் செட்டியார் மன்றம்; மாலை 4 மணி: ஓமியோபதி மருத்துவர் மாநாடு — பெரியார் மாளிகை, கீழவீதி; 4-45 மணி: தொல்காப்பியர் கழக ஆண்டு விழா—அரண்மனை இசையரங்கம்; 5-30 மணி: மாவட்ட என்.ஜி.ஜி ஓ. சங்க வரவேற்பு—சங்க அலுவலகம்; 6 மணி: கழகக் கொடியேற்றுவிழா—மணிக்கூண்டு அருகில்; 6-30 மணி: கரந்தைத் தமிழ்ச் சங்க வரவேற்பு; இரவு 7-30 மணி: கழகப் பொதுக்கூட்டம்—திலகர் திடல்.

அண்ணா கவியரங்கம்

தஞ்சை நகர தி.மு.க. சார்பில் 18 2 68 காலை 10 மணிக்கு இராமநாதன் செட்டியார் மன்றத்தில் நடைபெறவிருக்கும் அண்ணா கவியரங்கத்துக்கு அமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமை வகிப்பார்; கவிஞர்கள் ஆனந்தம், வேழவேந்தன், பொன்னிவளவன், தி.கு. நடராசன், முருகுசுந்தரம், முத்துலிங்கம், தமிழ்ப்பித்தன், தொல்காப்பியன், முடியரசன், அப்துல் ரகிமான் ஆகியோர் பங்கு கொள்வர்; நன்கொடை: ரூ. 10; 5; 2; 1; பெண்களுக்கு 50 காசு.

பம்பாயில்

அமைச்சர்

சத்தியவாணிமுத்து

தி.மு.க. சார்பில் வரவேற்பு

பம்பாய் வருகை தரவிருக்கும் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களுக்கு 18—2—68 மாலை 7-மணிக்கு திராவி தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

நெல்லிக்குப்பம் கழகத் தோழர்கட்கு:

"25-2-68-ல் நடைபெறவிருந்த நெல்லிக்குப்பம் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களின் விருப்பத்திற்கிணங்க, 3—3—68-க்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

"3—3—68 பிற்பகல் 3 மணியளவில், கிரிஜா திரைப்பட அரங்கில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன்—மாவட்டச் செயலாளர் திரு. இரா. சாம்பசிவம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது; பொது உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் உறுப்பினர் (தலைமை நிலைய) பதிவு அட்டைகளுடன் வருகைதருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, கடலூர் வட்ட தி.மு.க. செயலாளர் ஏ. வி. தண்டபாணி அறிவிக்கிறார்.

திருவள்ளுவர் ஈராயிரம்ஆண்டு நிறைவு தொடக்க விழா

தஞ்சை தொல்காப்பியர் கழகச் சார்பில், திருவள்ளுவர் ஈராயிரம் நற்பணித் தொடக்க விழா, 18—2—68 மாலை 4-45 மணிக்கு தஞ்சை அரண்மனை இசை மன்றத்தில் புலவர் ச. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்; அமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் தொடக்கவுரையாற்றுவார்.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

சென்னை 93-வது வட்டம் தியாகராய நகர் பிரகாசம் சாலையில் உள்ள மாநகராட்சி உயர் நிலைத் துவக்கப் பள்ளியின் புதிய முதல் மாடிக் கட்டிடத்தை, பேராசிரியர் திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி திறந்துவைப்பார்; இவ்விழா மேயர் டாக்டர் அபிபுல்லா தலைமையில் 19—2—68 மாலை 5-30 மணிக்கு நடைபெறும்; வரவேற்பு: எஸ். கிருஷ்ணமூர்த்தி எம்.சி.; ஏ. எஸ். இராமன் எம்.சி.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விளக்குக் காட்டியிருப்பதனை எடுத்துக்காட்டி 'மத்திய அரசு அந்த அடிப்படையில்தான் தொடர்ந்து செயல்படுகிறதோ' என, தாம் சந்தேகிப்பதாகத் தெரிவித்துப் பேசியிருக்கின்றார்—**கா. வேழவேந்தன்.**

தி. மு. கழக அரசை அப்புறப்படுத்த வேண்டுமென்று கூறிய சேத் கோவிந்த தாசுக்கு, தமது உரையின் மூலம் வேழவேந்தன் கொடுத்துள்ள பதிலடி, பொருத்தமான ஒன்றேயாகும்!

"மாநிலம் அதிக வளம் பெறுவதற்காக மட்டுமல்லாமல், அதிக அதிகாரங்களும் பெறவேண்டியதற்காக நிதிக் குழு தேவை" எனவும்—தமது உரையில் கவர்னர் குறிப்பிட்ட கருத்துக்காக—அவர் வாதாடியிருப்பது, பாராட்டுக்குரியது!

"ஆங்கிலேயர் காலத்தின்போது தரப்பட்ட அதிகாரங்கள்கூட, காங்கிரசார் காலத்தில் மாநிலத்துக்கு இல்லை" என்பதனைப் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்—**ஆலடி அருணா!**

97 அதிகாரங்களைத் தனக்கென வைத்திருக்கும் மத்திய அரசு, 67 அதிகாரங்களை மட்டுமே மாநிலங்களுக்குத் தந்துவிட்டு 47 அதிகாரங்களை இரண்டுக்கும் பொதுவாக வைத்திருப்பதனை—அரசியல் சட்டத்தை ஆதாரமாகக் காட்டி—விளக்கியுள்ளார் அருணா!

"'எலிகளைச் சாப்பிடுங்கள்' என்று மக்களுக்கு யோசனை கூறிய காங்கிரசுக்காரர்கள், கழக அரசின் படி அரிசித் திட்டத்தைப் பற்றிப் பேசவும் அருகதையற்றவர்கள்" என்ற அருணாவின் வாதம், சரியான ஒன்றாகும்!

அண்மையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு, தமிழகத்தின் பெருமையை உலகத்தின் கண்களில் மீண்டும் ஒருமுறை உயர்த்தியிருக்கிறது என்பதனைக் கண்டு மகிழ்ச்சி தெரிவித்திருக்கும் **எம். கந்தசாமி**, அதற்காகப் பாடுபட்ட அனைவரையும் பாராட்டியிருப்பதும் பாராட்டத்தக்கது.

தமிழக அரசின் மொழித் தீர்மானம், மற்றையத் தென்னக மாநிலங்களுக்கும் எப்படி எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறதென்பதை அவர் மேற்கோள் காட்டிப் பேசியிருப்பது, ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் சென்ற சில நாட்களாக நடந்துவரும் நடப்புகளை, கவனத்தில் கொணர்ந்து சிந்திக்கவைக்கின்றன!

"தமிழகம்போல் தீர்மானம் போடுங்கள்" என்று காங்கிரசு ஆளும் அந்த மாநிலங்களில் கேட்கும் குரல்களை, கந்தசாமி அவர்கள் தமது உரையில் எதிரொலித்துக் காட்டியிருப்பது இங்கே உள்ள காங்கிரசுக்காரர்களின் காதுகளில் விழ வேண்டும்!

உணவு உற்பத்தியை மையமாக வைத்து உரையாற்றியிருக்கும் **பி. எஸ். சந்தானம்**, உழவர்களைக் காங்கிரசுக்காரர்கள், 'நெல் பயிரிடாதீர்; கரும்பு போன்ற விளைபொருள்களைப் பயிரிடுங்கள்' என்று தூண்டிவிடும் துரோகப் போக்கினையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்!

'படி அரிசி எல்லாப் பகுதி மக்களுக்கும் ஏன் இல்லை' என்று சட்டமன்றத்தில் நாள் தவறாது கேட்கும் முன்னாள் ஆளும் கட்சி உறுப்பினர்கள், சந்தானத்தின் குற்றச்சாட்டுக்கு முதலில் தக்க விளக்கம் தரவேண்டும்!

ஒரு படி அரிசித் திட்டத்தினை எல்லாப் பகுதியினருக்கும் விரிவுபடுத்துவது பற்றித் தட்டிக் கேட்கக் காங்கிரசுக்காரர்களுக்குத் தார்மீக உரிமை கிடையாது; இருந்தாலும், 'மார்ட்டின்' என்ற காங்கிரசு உறுப்பினர், 'திட்டம் எல்லாப் பகுதிக்கும் விரிவுபடுத்தப்படாதது, சனநாயகப் பண்புக்கே விரோதமானது' என்ற 'பரந்த' பொருளில் நேற்றையத்தினம் விமர்சித்திருக்கிறார்.

வாதப்படியே அவருக்குப் பதிலளிக்க வேண்டுமானால், 'இந்திய அரசு காஷ்மீருக்கென்று வழங்கிக்கொண்டிருக்கும் சலுகைகள், ஏன் மற்ற பின்தங்கிய மாநிலங்களுக்குக்கூட இல்லை' என்று கேட்கலாம். எனினும், நேரம் கிடைத்தால் அந்த உறுப்பினர், மேலவையில் நேற்று முன்தினமே பொதுப் பணி அமைச்சர் தந்துள்ள காரணங்களைப் படித்துப் பார்த்துக்கொள்வது நல்லது!

'வெளியூர் செல்லும் அரசினர் பஸ்களில் சில இனி மைலுக்கு 2 காசுகளுக்குப் பதில் 2½ காசு வசூலிக்கப்படவிருக்கிறது' என்ற பொதுப் பணி அமைச்சரின் நேற்றையக் கேள்வி நேரத் தகவல்—காங்கிரசின் மேடைப் பேச்சாளர்களின் தவறான பிரச்சாரத்துக்கு வழிவகுக்காமல் இருப்பதற்கான விளக்கமாக இருக்கிறது!

தனியார் பஸ்கள் இதுவரையில் வசூலித்துவந்த 3 காசு கட்டணமும் 2½ காசுகளாகக் குறைக்கப்பட வேண்டுமென்ற உறுதிப்பாட்டுக்குப் பின்னர்தான், அரசுத் துறையின் பஸ் கட்டணம் 2-காசிலிருந்து 2½ காசாக ஆகியிருக்கிறது. இந்த சமரசத்தினால், பெருமளவு இலாபம் பயணிகளுக்குத்தான்! தனியார் பஸ் கட்டணத்தை 2½ காசுகளாகக் குறைத்த பெருமையும், போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத்தான்!